DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

C.C.NO.47/2024

**Depositions of PW 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **செல்வி** | **Caste** | |
| **Husband's Name** | **செந்தில்கணபதி** | **Calling** | **உதவி ஆய்வாளர்** |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th Day of March 2026.

Signature of Witness.

**13.03.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

**(சாட்சி காணொளி வாயிலாக விசாரணை செய்யப்பட்டார்)**

நான் தற்போது கோவை மாநகர், சரவணம்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.08.2023 ஆம் தேதி 21.00 மணியளவில் நான் எம்.புதுப்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, எரிச்சநத்தம் நடையநேரி கிழக்கு தெருவைச்சேர்ந்த ராஜேந்திரன்

மனைவி மாரிஸ்வரி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.129/2023 இதச பிரிவுகள் 341, 294(b), 323, 354, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை சட்டம் பிரிவு 4 – இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். சாட்சியால் பதிவு செய்யப்பட்ட **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.–3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) பின்னர் அன்றைய தினமே இரவு 21.40 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமமூர்த்தி, சசிகலா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.–4** ஆகவும், **பார்வை மகஜர் அ.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் மாரிஸ்வரி, குருவம்மாள், ராஜேந்திரன், சீதாலட்சுமி, ராமமூர்த்தி, சசிகலா ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில், 18.08.2023 ஆம் தேதி 11.00 மணியளவில் குமிழங்குளம் விளக்கில் வைத்து எதிரி செல்லபாண்டி என்பவரை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு சென்று உரிய நடைமுறைகளுக்கு பின்னர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

3) 25.11.2023 ஆம் தேதி 11.00 மணியளவில் நடையநேரி அரசு பள்ளி அருகே வைத்து எதிரி அய்யம்மாள் என்பவரை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு சென்று நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் 28.11.2023 ஆம் தேதிகாலை 9.30 மணியளவில்

நிலையம் ஆஜரான 3 வது எதிரி பெரிய அய்யம்மாள் என்பவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 354, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை சட்டம் பிரிவு 4 – இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.ஆ.1 புகார்மனுவில் சம்பவம் 17.08.2023 ஆம் தேதி மாலை 5.00 மணியளவில் நடந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். 4 மணி நேரம் காலதாமதமாக அன்றைய தினம் இரவு 9.00 மணியளவில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். காலதாமதத்திற்கான காரணம் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.8 இல் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். அ.சா.ஆ.1 புகார்மனுவில் அ.சா.1 மாரிஸ்வரி வீட்டிலிருந்து கடைக்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்தபோதுதான் சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார் என்றால், சரிதான். அ.சா.1 மாரிஸ்வரி தனியாக கடைக்கு செல்லும்போதுதான் எதிரிகள் வழிமறித்ததாக அவர் அளித்த அ.சா.ஆ.1 புகார் மனுவில் கூறியுள்ளார் என்றால், தனியாக என்று குறிப்பிட்டு சொல்லவில்லை, நான் கடைக்கு சென்றபோது என்று சொல்லியுள்ளார்.

2) அ.சா.1 மாரிஸ்வரி, அ.சா.2 ராஜேந்திரன் ஆகிய இருவரும் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் இருசக்கர வாகனத்தில் கடைக்கு செல்லும்போது சம்பவம் நடந்தது என்று கூறவில்லை என்றால், சரிதான். அ.சா.1 மாரிஸ்வரி அளித்த அ.சா.ஆ.1 புகார்மனுவிலும் என்னிடம் அளித்த வாக்குமூலத்திலும் 1வது எதிரி கத்தியை காட்டி தன்னை மிரட்டியதாக கூறவில்லை என்றால், சரியல்ல கூறப்பட்டுள்ளது. அ.சா.1 மாரிஸ்வரி அளித்த அ.சா.ஆ.1 புகார்மனுவிலும் என்னிடம் அளித்த வாக்குமூலத்திலும் 1வது எதிரி கத்தியை வைத்து குத்த வந்ததாக கூறவில்லை என்றால், சரிதான். அ.சா.1 மாரிஸ்வரி அளித்த அ.சா.ஆ.1 புகார்மனுவிலும் என்னிடம் அளித்த வாக்குமூலத்திலும் 1வது எதிரி எங்கிருந்து கத்தியை எடுத்து வந்தார் என்று கூறவில்லை என்றால், சரிதான். அ.சா.1 மாரிஸ்வரி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சண்டை முடிந்தபிறகு 1வது எதிரி வீட்டிலிருந்து கத்தியை எடுத்து வந்து குத்த வந்ததாக சொல்லவில்லை என்றால், சரிதான்.

3) அ.சா.2 ராஜேந்திரன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அவர் தனது இருசக்கர வாகனத்தில் அ.சா.1 மாரிஸ்வரியுடன் கடைக்கு சென்று திரும்ப வரும்போதுதான் 1வது எதிரி அவர்களை கத்தியை காட்டி வழிமறித்ததாக கூறவில்லை என்றால், சரிதான். 3 எதிரிகளும் என்னென்ன வார்த்தைகளை பயன்படுத்தி தன்னை அசிங்மாக பேசினார்கள் என்று குறிப்பாக அ.சா.1 மாரிஸ்வரி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால், சரியல்ல. அ.சா.1 மாரிஸ்வரி வீட்டிலிருந்து சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் எவ்வளவு

தொலைவில் உள்ளது என்றால், சுமார் 50மீ இருக்கும். அ.சா.1 மாரிஸ்வரி வீட்டிலிருந்து சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் சுமார் 1 ½ கி.மீ தொலைவில் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக 50 மீ என பொய்யான கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4) அ.சா.1 மாரிஸ்வரி எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க வந்தார் என்றால், இரவு 9.00 மணிக்கு வந்தார். அ.சா.1 மாரிஸ்வரி காவல் நிலையத்திற்கு வரும்போதே புகாரை எழுதிகொண்டு வந்தாரா என்றால், சரிதான் எழுதிதான் கொண்டு வந்தார். அ.சா.1 மாரிஸ்வரி காவல் நிலையத்திற்கு வரும்போது சேலையுடன் வந்தாரா, நைட்டி அணிந்து வந்தாரா என்றால், நைட்டியின் மேல் ஒரு சட்டை அணிந்து வந்தார். மேற்படி சட்டை யாருடையது என்றால் அ.சா.1 மாரிஸ்வரியின் கணவருடையது. அ.சா.2 ராஜேந்திரன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அ.சா.1 மாரிஸ்வரி நைட்டியின் மேல் அணிந்துவந்த சட்டையை சாட்சி சீதாலட்சுமி என்பவர் கொடுத்ததாக கூறவில்லை என்றால், சரிதான்.

5) 1வது எதிரி அ.சா.1 மாரிஸ்வரியின் கழுத்தில் இருந்த தாலியை இழுத்ததாக கூறுவதன் மூலம் அவரது கழுத்தில் காயம் ஏதேனும் காணப்பட்டதா என்றால், காயம் ஏதும் இல்லை. அ.சா.1 மாரிஸ்வரி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் என் பின்னால் இருந்து 1வது எதிரி தாலி கயிறை இழுத்ததாக சொல்லவில்லை என்றால், சரிதான். அ.சா.1 அணிந்திருந்ததாக கூறப்படும் தாலி கயிறில் தங்கத்தினால் தாலி அணிந்திருந்தாரா என்றால், அணிந்திருந்தார். அ.சா.1 மாரிஸ்வரி

என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் 1வது எதிரி தனது தாலியை அத்து எறிந்தார் என்று சொல்லியுள்ளாரா என்றால், சொல்லியுள்ளார். அ.சா.2 ராஜேந்திரன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் கீழே கிடந்த தாலி, குண்டுமணி ஆகியவற்றை எடுத்து வந்து காவல் நிலையத்தில் கொடுத்ததாக கூறவில்லை என்றால், சரிதான்.

6) அ.சா.1 மாரிஸ்வரி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்று கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மாரிஸ்வரி, அ.சா.2 ராஜேந்திரன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலிருந்து நேராக காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார்களா என்றால், அ.சா.1 மாரிஸ்வரி சட்டையை அணிந்துகொண்டு காவல் நிலையத்திற்கு வந்துவிட்டதாக கூறினார். அ.சா.1 மாரிஸ்வரி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் 1வது எதிரி தாலிக்கயிறை அறுத்து கொண்டு ஓடும்போது அ.சா.2 ராஜேந்திரன் அவரிடம் கெஞ்சி கேட்டு தாலியை வாங்கி வந்ததாக கூறவில்லை என்றால் சரிதான்.

7) சம்பவம் நடந்த இடம் 1வது எதிரியின் வீட்டு வாசல் முன்பு என்றால், சாட்சி குருவம்மாள், க/பெ.மாரியப்பன் வீட்டு வாசல் முன்பு நடந்துள்ளது. அ.சா.ஆ.4 மாதிரி வரைபடத்தில் அய்யனார் என்பவரது வீட்டு வாசல் முன்பாக சம்பவம் நடந்துள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். குருவம்மாள், சீதாலட்சுமி ஆகியோரை தவிர சம்பவ இடத்திற்கு அருகில் வசிக்கும் நபர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றால், சரிதான். எம்.புதுப்பட்டி காவல் நிலைய மனுரசீது எண் 247/2023 இல் 1வது எதிரிதான் புகார்தாரர் என்றால்,

1வது எதிரி அவரது மனைவியை அ.சா.1 மாரிஸ்வரியின் அண்ணன் அழைத்து சென்றுவிட்டதாக புகார் அளித்திருந்தார். ஆனால் மனுரசீது எண் தற்போது ஞாபகமில்லை.

8) 1வது எதிரி தனது மனைவியை கண்டுபிடித்து ஒப்படைக்குமாறு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால், தெரியாது. 1வது எதிரி ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ததால் அவர் மீது கோபம் கொண்டு அ.சா.1 மாரிஸ்வரி கொடுத்த பொய்யான புகாரின் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.கிழிக்கப்பட்டதாக கூறப்படும் அ.சா.1 மாரிஸவரியின் நைட்டி, அறுக்கப்பட்டதாக கூறப்படும் தாலி, எதிரியால் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் கத்தி ஆகியன என்னால் கைப்பற்றப்படவில்லை என்றால், சரிதான்.

9) நான் சொன்ன நேரத்தில் சொன்ன நாளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமே போகாமல் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் ஆகியவை பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை விசாரிக்காமல் அவர்களது வாக்குமூலங்களை பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முறையாக புலன்விசாரணை செய்யப்படாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**